வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 84

சனிக்கிழமை 18 பெப்ரவரி 2023 | மாசி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

## இந்துசமயப் பேரவை “உதயனுக்கு” விருது!

யாழ்ப்பாணம், பெப். 18
நெருக்கடியான சூழ்நிலையில் சைவத் தமிழரின் விடிவுக்காக பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வீரஉணர்வை வெளிக்கொணரும் - பறைசாற்றும் ‘உதயன்’ பத்திரிகை நிறுவனத்துக்கு இந்து சமயப் பேரவையால் ‘ஊடக சாம்ராச்சியப் பேரரசு’ விருது வழங்கப்படவுள்ளது.
உதயன் நிறுவனப் பணிப்பாளருமான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனிடம் இந்த விருது கையளிக்கப்படவுள்ளது. »11



## சிவராத்திரி இன்று

யாழ்., பெப்.18
இந்துக்களின் முக்கியமானவிரதங்களில் ஒன்றான மகா சிவராத்திரி விரதம் இன்று கடைப்பிடிக்கப்படும் ஈழத்தில் உள்ள »11

# 13ஐ ஒழிக்கும்வரை ஓயப்போவதில்லை!

பிக்குகள் சபதம்

மிகிந்தலையில் அடுத்தகட்ட போராட்டம்

கொழும்பு, பெப்ரவரி 18
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எதிராக மகா சங்கத்தினர் பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்தார். »11

## பிரபாகரன் இருந்தார்; பின்னர் மறைந்தார்

ரணிலின் பதில் இது

கொழும்பு, பெப். 18
பிரபாகரன் என்றொரு தலைவர் இருந்தார் என்பதும் உண்மை. அவர் பின்னர் மறைந்தார் என்பதும் உண்மை.
-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விரைவில் வெளிப்படுவார் என்று தமிழ்த் தேசியப் »11

## பிக்குகளின் எதிர்ப்பை புரிந்துகொள்ள முடியவில்லை!

இப்படிச் சொல்கிறார் ரணில்



கொழும்பு, பெப். 18
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை தீயிட்டு எரித்து பிக்குகள் அவ்வாறு ஏன் நடந்துகொண்டார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.
இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க »11

## முன்னாள் துணைவேந்தர் விக்னேஸ்வரன் மறைவு

யாழ்ப்பாணம், பெப்.18
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், கணிதத்துறை பேராசிரியருமான இ.விக்னேஸ்வரன் மாரடைப்புக் காரணமாக நேற்றுக் காலமானார். »11



## மதவாதம் வளர்வதை ஊக்குவிக்கக்கூடாது!

அர்ஜுன் சம்பத் தெரிவிப்பு

வவுனியா, பெப்.18
இலங்கையில் மத அடிப்படைவாதம் வேகமாக வளர்ந்து வருகின்றது - என்று தமிழக இந்துமக்கள் கட்சியின் நிறுவுநர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.
இலங்கை வந்துள்ள தமிழக இந்துமக்கள் கட்சியின் நிறுவுநர் அர்ஜுன் சம்பத் வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் »11



# உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி வழங்குவதில் சிக்கல்!

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதியமைச்சின் செயலர் அறிவிப்பு



### தேர்தலை நடத்துவதில் இன்னொரு முட்டுக்கட்டை

கொழும்பு, பெப்.18
நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதியை வழங்குவதில் பெரும் சிக்கல் காணப்படுகின்றது என்று நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.
நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டபோது அவர்கள் இதைத் தெரிவித்தனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா »11

திகதி குறிப்பிடாமலேயே

## தபால் மூலமான வாக்களிப்பு காலவரையற்று ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.18
அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப் பதிவு காலவரையற்று ஒத்திவைக்கப்படுகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி உறுப்பினர் தொகை 5 ஆயிரமாகக் குறைக்கத் திட்டம்

## மார்ச்சில் அறிக்கை தயார்!



கொழும்பு, பெப். 18
எல்லை நிர்ணயக் குழுவின் நடவடிக்கைகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. அதற்கமைய இம்மாத இறுதியில் இடைக்கால அறிக்கையையும், மார்ச் இறுதி வாரத்தில் முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- எல்லை நிர்ணயக் குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களின் செயற்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. மேலும் 6 மாவட்டங்களின் செயற்பாடுகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. ஏனையவற்றில் இரு மாவட்டங்களின் செயற்பாடுகள் மாத்திரமே 50 சதவீதத்தையும் விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எமது முழுமையான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 25 - 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் தயாரிக்க முடியும். எனினும் எமது இடைக்கால அறிக்கையை இம்மாத இறுதியில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்து 800 இலிருந்து, 5 ஆயிரத்து 100 அல்லது 4 ஆயிரத்து 900 வரை குறைக்கமுடியும் என்று நம்புகின்றோம் - என்றார். (ஒ-இ)

# பதிவுசெய்யப்படாத இந்திய நிறுவனங்களிடம் மருந்துகள் கொள்வனவு!

## உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, பெப். 18
பதிவுசெய்யப்படாத இரண்டு இந்திய தனியார் நிறுவனங்களிடமிருந்து மருந்துப்பொருள்களை கொள்வனவு செய்வது தொடர்பில் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவில் சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அமைச்சரவை அமைச்சர்கள் உள்ளிட்ட 47 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மருந்துக் கொள்வனவு மக்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை புறக்கணிப்பதுடன் மக்களின் நம்பிக்கை மற்றும் பொதுநிதியை துஷ்பிரயோகம் செய்துள்ளது.

பதிவு செய்யப்படாத இந்திய தனியார் நிறுவனங்கள் மூலம் மருந்துப்பொருள்களை வாங்குவதில் அமைச்சரவை அமைச்சர்களின் பங்கு, மருந்துவப் பொருள்களை வாங்குவதற்கு பதிவு விலக்கு வழங்குவதில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனத்தின் பங்கு ஆகியவற்றைச் சவாலுக்குட்படுத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# முட்டை இறக்குமதிக்கு தற்காலிக அனுமதியே!



கொழும்பு பெப் 18
நாட்டில் ஏற்பட்டுள்ள முட்டைத் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு தற்காலிகமாக முட்டை இறக்குமதி செய்ய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. விவசாய அமைச்சு, அறிக்கை ஒன்றின் மூலம் இதனை அறிவித்துள்ளது.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள், வெதுப்பக துறையினருக்கு மாத்திரம் வழங்கப்படும் என்றும் பொது நுகர்வுக்காக, வர்த்தக நிலையங்களில் இறக்குமதி செய்யப்படும் முட்டையை விநியோகிக்க அனுமதி வழங்கப்படக்கூடாது என்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ஒ-14,இ)

# அபேக் ஷா மருத்துவமனையில் நன்கொடை மருந்து விற்பனை!

## விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சு பணிப்பு

கொழும்பு, பெப். 18
மஹரகம அபேக் ஷா மருத்துவமனைக்கு நன்கொடையாக கிடைத்த மருந்துகளை விற்பனை செய்தமை தொடர்பில் உடன் விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவுறுத்தியுள்ளார்.

மஹரகம அபேக் ஷா மருத்துவமனையில் புற்றுநோயாளர்களுக்காக வழங்கப்படும் மருந்துகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்தநிலையில் அங்கு நன்கொடையாகக் கிடைத்த மருந்துகளை விற்பனை செய்தமை தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய உடன் விசாரணை மேற்கொண்டு சட்ட மற்றும் ஒருக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த விசாரணைகளுக்காக நேற்றுமுன்தினம் விசாரணைக் குழு மஹரகம அபேக் ஷா மருத்துவமனைக்குச் சென்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகரவிடம் ஆரம்ப விசாரணை அறிக்கை கோரியுள்ளது. (ச-இ)

# உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தால் 'பன்னாட்டு குறுந்தொழில் மாநாடு'

கொழும்பு, பெப். 18
உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் 'பன்னாட்டு சிறு குறுந்தொழில் மாநாடு' மலேசிய தலைநகர் கோலாலம்பூர் பேரா மாநிலத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் இருநாள்கள் நடைபெறவுள்ளன. இந்திய அரசு மற்றும் மலேசிய அரசின் சிறு குறுந்தொழில் அமைச்சகத்தின் அனுசரணையுடன் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

இருநாட்டு வர்த்தகத்தில் சிறு மற்றும் குறுந்தொழிலில் வர்த்தகத்தை அதிகரிக்கும் வகையில் உலகத் தமிழ் வர்த்தக சங்கம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

மாநாட்டில் இந்திய - இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

சிறு மற்றும் குறுந்தொழிலில் அடுத்தகட்ட பொருளாதார நகர்வுக்கு எடுத்துச் செல்லும் வகையில் இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ச)

# 2,000 இலங்கையருக்கு தாதியர் வேலைவாய்ப்பு

## இஸ்ரேல் பிரதிநிதிகள் உறுதி

கொழும்பு, பெப். 18
இந்த ஆண்டு 2 ஆயிரம் இலங்கையர்களுக்கு தாதியர் வேலைவாய்ப்பை வழங்க இஸ்ரேல் இணங்கியுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இஸ்ரேலின் விசேட பிரதிநிதிகள் குழு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்தனர். அதன் போதே இதற்கான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை இஸ்ரேலுக்கான தாதிய தொழில் வாய்ப்பை வழங்குவதற்காக இடைத்தரகர்கள் பணம் கோரினால், அது தொடர்பான தகவல்களை தமக்கு வழங்குமாறு இஸ்ரேல் நாட்டின் குடித்தொகை மற்றும் புலம்பெயர்வுக்கான அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14.இ)

# மின்சார இணைப்புக்கான உபகரணங்கள் இல்லை!

## நாட்டுக்கு நஷ்டமென மின்சாரசபை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 18
நாளாவிய ரீதியில் 36 ஆயிரம் மின்சார இணைப்புக்களை வழங்குவதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மின்விநியோகத்துக்கு அவசியமான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளில் நாணயக் கடிதங்கள் விடுவிக்கப்படாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரோஹான் செனவிரத்ன தெரிவித்தார். மின்பிறப்பாக்கி, வயர், மீற்றர் என்பவற்றைக் கொள்வனவு செய்யமுடியாதுள்ளது. இதன் காரணமாக நாட்டுக்கு நட்டம் ஏற்படுகிறது.

பொதுமக்கள் கோரியுள்ள 36 ஆயிரம் மின் இணைப்புகளும், கைத்தொழில்துறைக்கான ஆயிரத்து 200 மின் இணைப்புகளும் இதுவரை வழங்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# தலைக்கவசமின்றிச் சென்ற பெண் பொலிஸுக்கு அறைந்துவிட்டு தப்பிப்பு!

கொழும்பு, பெப். 18
தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணைக் கடமையில் இருந்த போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி மறித்தபோது அறைந்துவிட்டு அந்த இடத்தை விட்டுத் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜாஎல பிரதேசத்தில் போக்குவரத்துக் கடமையிலிருந்த கான்ஸ்டபிள் ஒருவரே நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவத்துக்கு முகம்கொடுத்துள்ளார். சந்தேகநபரான குறித்த பெண் சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனக் கண்டறிந்து கைதுசெய்யச் சென்ற நிலையில் அந்தப் பெண் நீண்டகாலமாக மனநலநோய்க்கான சிகிச்சை பெற்று வருகிறார் என வீட்டாரால் தெரிவிக்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஜாஎல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் இராணுவத்தளம் அமெரிக்கா அமைக்கமாட்டாது

கொழும்பு, பெப். 18

திருகோணமலையில் இரா ணுவத்தளம் ஒன்றை அமைப்பதற்கான பேச்சுகளை நடத்த தாம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டதாக கூறப்படுவதை நிராகரிக்கிறோம் என அமெரிக்காவின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை துணை உதவிச் செயலாளர் ஜெடியா பி ரோயல் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு வருகைதந்துள்ள அமெரிக்க அதிகாரிகள் குழு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனை நேற்றுச் சந்தித்தனர்.

இதன்போது திருகோணமலை தளம் குறித்து எதனையும் தெரிவிக்கவிரும்பவில்லை என அமெரிக்க அதிகாரி குறிப்பிட்டார்.

சந்திப்பின்போது அமெரிக்காவுடனான பாதுகாப்பு உறவு இந்தோ-பசுபிக் பாதுகாப்பு உறவு பிராந்திய ஸ்திரத்தன்மை ரஷ்ய- உக்ரைன் போரின் விளைவுகள் ஆகியவை குறித்தே ஆராயப்பட்டன என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமெரிக்கா 150 பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சிகளை வழங்குவதுடன் அண்மையில் இலங்கைக் கடற்படையினருக்கு இரண்டு கப்பல்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கியூ.ஆர்.முறைமையின்றி எரிபொருள் வழங்க மறுத்த ஊழியர் மீது வாள்வெட்டு!

### பகலில் வாய்த்தர்க்கம்; இரவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப்.18

கியூ.ஆர் முறைமையின்றி எரிபொருள் விநியோகிக்க மறுத்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரைத் துரத்தித் துரத்தி வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். படுகாயமடைந்த ஊழியர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் செட்டித்தெரு பகுதியைச் சேர்ந்த தேவராசா குணாளன் (வயது-24) என்பவரே வாள்வெட்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

எரிபொருள் நிலையத்துக்கு பகல் வேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கியூ.ஆர். முறைமையின்றி பெற்றோலை விநியோகிக்குமாறு கோரியுள்ளனர். பணியாற்றும் ஊழியர் கியூ.ஆர். இல்லாமல் எங்களால் எரிபொருளை விநியோகிக்கமுடியாது எனக் கூறியுள்ளார். அதனையடுத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் இரவு 10:45 மணியளவில் குறித்த எரிபொருள் நிலையத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவினர் துடுப்பாட்ட மட்டையின் உறையினுள் மறைத்துகொண்டு வந்த வாளால் ஊழியரைத் தாக்கியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான ஊழியர் வீதியை நோக்கி ஓடிய நிலையில் ஊழியர் மீது துரத்தித் துரத்தி வாள்வெட்டுத்தாக்குதல் நடத்தி விட்டு தாக்குதலாளிகள் தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பகல் வேளையில் கியூ.ஆர். தொடர்பில் இடம்பெற்ற வாய்த்தர்க்க முரண்பாடு காரணமாகவே இந்த வாள் வெட்டுச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

## டெங்கு அபாய வலயத்தில் யாழ்ப்பாணமும் உள்ளடக்கம்!

கொழும்பு, பெப். 18

தற்போது நாட்டில் 12 மாவட்டங்களில் டெங்கு அபாய நிலைமை காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கேகாலை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களே டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரை 3 ஆயிரத்து 637 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)



## யு.எஸ்.எய்ட் பிரதிநிதிகளுடன் யாழ். மாநகர மேயர் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் ஆர்னோல்ட் தலைமையிலான மாநகர துறைசார் அதிகாரிகள் குழுவுக்கும் யு.எஸ்.எய்ட் நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று, யாழ். மாநகரசபையின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தற்பொழுது மாநகரசபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் கழிவு முகாமைத்துவத்தின் நடைமுறை, மாநகரசபையின் பொறிமுறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் திண்ம மற்றும் திரவக் கழிவகற்றல் முறைமையின் சவால்கள் தொடர்பில் மாநகரப் பிரதம பொறியியலாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இறுதியில் யாழ்.மாநகர திண்ம மற்றும் திரவக் கழிவு முகாமைத்துவத்தை மேலும் திறம்பட மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் தேவைகள், யு.எஸ்.எய்ட் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

கலந்துரையாடலில் யாழ்.மாநகரசபை மேயர், ஆணையாளர், பிரதம பொறியியலாளர், பொறியியலாளர்கள், மாநகர துறை சார்ந்த அதிகாரிகள், யு.எஸ்.எய்ட் நிறுவனப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஒ-14,20)

## குளிக்கப்போய் சேறுபூசாதீர்கள்

### யாழ்.இந்து சமயப் பேரவை தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 18

இலங்கை வாழ்தமிழ் மக்கள் எவரது ஆதரவுமின்றி அநாதைகளாக வாழும் இந்தச் சூழலில் சிவராத்திரி தினத்தின் புனிதத்தை கண்டிப்பாகப் பேண வேண்டும் என்று யாழ்ப்பாண இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சிவராத்திரி விரதத்தில் பசித்திருத்தல், விழித்திருத்தல், இறைவனை இடைவிடாது தியானத்தில் என்பன முக்கியமான அம்சங்களாகும். விரதம் பற்றி சாஸ்திரங்கள் விதந்து கூறுகின்றன. இது இவ்வாறிருக்க சில ஆலயங்களில் களியாட்டங்களையும், பட்டிமன்றங்களையும் சினிமாப்பாடல்களையும் பாடிக் கண்விழிப்பது குளிக்கப் போய் சேறு பூசுவதற்கு ஒப்பானதாகிறது. இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாளில் சிவாலயங்களில் நடைபெறும் நான்கு சாமப்பூசைகளில் பங்குபற்றுவதோடு அடிமுடி தேடு படலம், திருமுறைப்பாராயணம் போன்றவற்றில் ஈடுபடலாம். சிவபூசை செய்யும் அதிகாரம் பெற்றவர்கள் அதைச் சிறப்பாகச் செய்யலாம். சமகம், ருத்ரம் திரிசதி போன்றவற்றைப் பாராயணம் செய்யக்கூடியவர்கள் அதில் ஈடுபடலாம். எனவே தமிழ்மக்கள் இன்றைய இக்கட்டான சூழலில் சிவராத்திரி விரதத்தை மாபெரிய ஆத்மீக ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். இதுவே எமது பெருவிருப்பாகிறது - என்றுள்ளது. (ஒ-14)

## போதையை வேரறுப்பதற்கு மக்கள் ஒத்துழைப்புத் தேவை

### பொலிஸார் கோரிக்கை

கொழும்பு, பெப். 18

அந்தந்தப் பிரதேச மக்களின் ஒத்துழைப்புக் கிடைப்பதன் மூலமே குற்றச் செயல்களை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும். அதற்கென அனைத்துக் கிராம அலுவலர் பிரிவிலும் பொலிஸார்-பொதுமக்கள் நட்புறவை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறுகையில்,

அச்சுவேலி நகரப் பகுதியை மையமாக வைத்து போதைப்பொருள் வியாபாரம் இடம்பெறுவதாக பொலிஸ் நிலையத்துக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.விசேட போதைப்பொருள் கண்டறியும் நாய்களின் உதவியுடன் சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த காலங்களில் வேறு பிரதேசங்களிலிருந்து வருவோர் இங்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு மிக முக்கமான ஒன்று. ஒரு பொலிஸ் நிலையத்தில் 1,000 பொலிஸார் இருந்தாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றி குற்றச்செயல்களை பொலிஸார் கட்டுப்படுத்துவது கடினம்.

பொதுமக்கள் - பொலிஸார் இடையே நட்புறவை மேம்படுத்தும் முகமாக அனைத்து கிராம அலுவலர் பிரிவிலும் நட்புறவு செயற்றிட்டம் மேற்கொள்ளவுள்ளோம்.

அந்தந்தப் பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்களை அந்தப் பிரதேச மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும். மக்களால் வழங்கப்படும் தகவல் இரகசியம் காக்கப்படும்.

மக்கள் ஒத்துழைப்பு கிட்டுவதனூடாகவே துரிதமாக போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருவிற்றரின் புதிய 'சி.இ.ஓ.' வளர்ப்பு நாயான 'பிளாக்கி'

## அறிமுகப்படுத்தினார் எலான் மஸ்க்



வொஷிங்டன், பெப். 18
ருவிற்றரின் புதிய தலைமைச் செயல் அதிகாரி இவர் என புகைப்படம் ஒன்றை எலான் மஸ்க் அறிமுகம் செய்துள்ளார். ஆனால் அது மனிதரல்ல. அவரது வளர்ப்பு நாயான 'பிளாக்கி' எலான் மஸ்க் ருவிற்றர் நிறுவனத்தைக் கையகப்படுத்தி அதன் தலைமை செயல் அதிகாரியாக கடந்த ஆண்டு பொறுப்பேற்றார். தொடர்ந்து பணியாளர்கள் நீக்கம், பதிவிடும் முறையில் நவீனமயமாக்கம் உள்ளிட்ட அவரது அதிரடி நடவடிக்கைகள் சர்ச்சைக்குள்ளானது.
பின்னர் எலான் மஸ்க் ருவிற்றர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பதவிலிருந்து தான் விலகவேண்டுமா என பயனர்களிடம் வாக்கெடுப்பு நடத்தி 56 வீத பயனர்கள் பதவி விலகவேண்டும் என தெரிவித்த நிலையில் தன்னுடைய பதவிக்குத் தகுதியான முட்டாள் கிடைத்தவுடன் பதவியை விட்டு வெளியேறுகிறேன் எனத் தெரிவித்தார்.
இந்நிலையில் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக தனது வளர்ப்பு நாயின் புகைப்படத்தை பகிர்ந்து அறிமுகப்படுத்தியுள்ளார்.
அந்தப் புகைப்படத்தில் அவரது வளர்ப்பு நாய் கறுப்பு ரிசேர்ட் அணிந்து நாற்காலியில் உள்ளது. 'சி.இ.ஓ. என்று எழுதப்பட்டுள்ளது. பிளாக்கியின் முன்னால் ஓரிரு ஆவணங்களும் சிறிய மடிக்கணினியும் உள்ளது. அந்த ஆவணங்களில் பிளாக்கியின் கால்தடங்கள் பதிவுசெய்யப்பட்ட காட்சிகளும் உள்ளன.
எலான் மஸ்கின் இந்த பதிவு தற்போது சமூகவலைத்தளத்தில் ட்ரெண்டாகியுள்ள நிலையில் ருவிற்றர் பயனர்கள் பலரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். (ச-இ)

# துருக்கி– சிரியாவில் 42,000 கடந்தது பலி எண்ணிக்கை

அங்காரா, பெப். 18
துருக்கி, சிரியாவில் இடம்பெற்ற நிலநடுக்கங்களில் பலியானோர் எண்ணிக்கை 42 ஆயிரத்தைக் கடந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
துருக்கி - சிரியா எல்லையில் கடந்த 6ஆம் திகதி அதிகாலையில் 7.8 என்ற ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் விண்ணை முட்டும் அளவுக்கு கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் சீட்டுக்கட்டுகளை போல் நொடிப் பொழுதில் சரிந்து விழுந்தன.
இடிபாடுகளில் லட்சக்கணக்கானோர் சிக்கிய நிலையில் தினந்தோறும் முழுவீச்சில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீட்கும் பணியில் இரவு பகல் பாராமல் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.
பேரழிவை ஏற்படுத்திய இந்த நிலநடுக்கத்தால் இதுவரை உயிரிழந்தோரின் எண்ணிக்கை 42 ஆயிரமாக உயர்ந்துள்ளது.
துருக்கியில் 36 ஆயிரத்து 187 பேரும், சிரியாவில் 5 ஆயிரத்து 800 பேரும் உயிரிழந்தனர் என அந்நாட்டு அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### துருக்கி நிலநடுக்கம்

# 248 மணிநேரத்தின் பின் உயிருடன் சிறுமி மீட்பு

அங்காரா, பெப். 18
நிலநடுக்கம் ஏற்பட்ட துருக்கியின் கஹ்ரமன்மராஸ் மாகாணத்தில் கட்டட இடிபாடுகளிலிருந்து 17 வயதுச் சிறுமி ஒருவர் 248 மணிநேரத்துக்குப் பின் நேற்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.
துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
இருநாடுகளில் மொத்த உயிரிழப்பு 42 ஆயிரத்தைக் கடந்துள்ளது.
இந்நிலையில் 248 மணி நேரத்துக்குப் பிறகு மீட்கப்பட்ட சிறுமி ஆரோக்கியத்துடன் உள்ளார் எனவும் ஒருவாரம் கடந்த நிலையில் உயிருடன் ஒருவரை மீட்டதில் மகிழ்ச்சியடைகிறோம் என மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். (ச-இ)

# நீருக்கு அடியில் நீண்டநேர முத்தம்

## காதலர் தினத்தில் கின்னஸ் சாதனை



தென்னாபிரிக்க ஜோடி ஒன்று நீருக்குள் நீண்டநேர முத்தம் கொடுத்து 13 ஆண்டுகால கின்னஸ் உலக சாதனையை முறியடித்துள்ளது.
இந்த தம்பதி 5 ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர்.
காதலர் தினத்தில் புதுமையாக ஏதேனும் செய்யவேண்டுமென விரும்பிய அவர்கள் மாலைதீவிலுள்ள விடுதியிலுள்ள நீச்சல் குளத்துக்குள் நீண்டநேர முத்தம் கொடுத்து கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளனர்.
4 நிமிடங்கள் மற்றும் 6 வினாடிகள் வரை நீடித்த இவர்களது முத்தம் 13 ஆண்டுகளுக்கு முன்பு நீருக்குள் முத்தம் கொடுத்தபடி 3 நிமிடங்கள் 24 வினாடிகள் வரை இருந்த கின்னஸ் சாதனையை முறியடித்துள்ளது. (ச-இ)

# இனி எங்கும் கைலாசா நித்தியானந்தா அதிரடி!

சென்னை, பெப். 18
சர்ச்சைகளின் புகழ் சாமியார் நித்தியானந்தா தற்போது இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடு களில் தனது ஆச்சிரமங்களை திறப்பதற்கு முடிவு செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது.
பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிய நித்தியானந்தா இந்தியாவிலிருந்து தலைமறைவானார். பின்னர், கைலாசா என்ற தனித்தீவு வாங்கி அங்கு குடியேறிவிட்டதாக அவரே அறிவித்தார்.
பின்னர் கைலாசாவை அங்கீகரிக்கும் வகையில் ஐக்கிய அமெரிக்காவுடன் கடந்த ஜனவரி மாதம் இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது எனக் கூறப்பட்டது. இதுதொடர்பில் யூஜெர்சியில் உள்ள நெவார்க் நகரம், கைலாசா இடையே ஒப்பந்தம் கையெழுத்திடுவது போன்ற ஒளிப்படங்களும் வெளியானது.
அத்துடன் ஆபிரிக்கா கண்டத்திலுள்ள சில நகரங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள நகரங்களுடன் வர்த்தக ரீதியான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்குள்ள வெளிநாட்டு கோயில்கள் சிலவற்றை நித்தியானந்தா வாங்கியுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின.
இந்தநிலையில் வெளிநாடுகளில் விலைக்கு வாங்கப்பட்டுள்ள ஆலயங்களில் கைலாசா ஆச்சிரமங்களை திறக்க நித்தியானந்தா அவரது சிஷ்யர்கள் மற்றும் பக்தர்களுடன் ஆலோசித்து வருகிறார் எனக் கூறப்படுகிறது. (ச-இ)


72வது பிறந்த தினமும் 4ம் மாத நினைவஞ்சலியும்





தோற்றம் 18 . 02 . 1951
மறைவு 18 . 10 . 2022

அமரர் திருமதி கலாவதி பூலோகசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை, பகுதித்தலைவர் யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

அம்மா!!
ஈர் இரண்டு திங்கள் ஆனதோ!
எம்மை தவிக்கவிட்டு நீங்கள் சென்று !
எமை ஈர் ஐந்து திங்கள் சுமந்துபெற்ற
உங்களுக்கு இன்று பிறந்தநாள் ....
சனிப்பிரதோசம் சிவராத்திரியின் சிவன் காலடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
என்றும் குடும்பத்தினர்.
ஏழாலை மேற்கு, ஏழாலை.
கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
(CS 23525) 1-6


# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.



**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர் பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குழப்பங்கள் ஏற்படலாம்.



**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு.



**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.



**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாய்ப்பு உண்டாகும்.



**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்புஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவு களும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தருவார்.



**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர் பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.



**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.



**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விஷயத்திலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.



**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.



**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எங்கள் கண்களைக் குத்தும் விரல்கள்

கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இலங்கையின் 75 ஆவது சுதந்திரநாள் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் ஒரு பகுதியாக அன்றிரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், களியாட்ட இசை நிகழ்வும் நடத்தப்பட்டது. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலத்தில் இவ்வாறான ஒரு கவனக் கலைப்பான் தேவையா? என்ற கேள்வி ஒரு புறமும், உயர்தரப் பரீட்சைக் காலத்தில்கூட தவறாது மின்வெட்டை நடைமுறைப்படுத்திய மின்சாரசபை அன்றையநாளில் மாத்திரம் மின்வெட்டை நடைமுறைப்படுத்தாது விட்டது மறுபுறமும் மக்களிடையே பலத்த விசனத்தை உண்டாக்கியது.

அதே பெப்ரவரி 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் சுதந்திரநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நடைபெறும் இடத்துக்கு சில மீற்றர்கள் தூரத்தில் கறுப்புக்கொடி ஏந்தி கரிநாள் போராட்டம் ஒன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியளவானோரே – சுமார் 20 பேரே – கலந்துகொண்டிருந்தார்கள். பின்னர் அவர்களில் சிலர் கைதும் செய்யப்பட்டனர்.

ஆனால், அதேநாளில் இரவுவேளை எந்தச் சுதந்திரநாளை கரிநாளாக அறிவித்தார்களோ அதே சுதந்திரதினத்தில் இசை களியாட்ட நிகழ்வில் சுமார் ஆயிரத்துக்கும் குறையாத இளையோர் பங்குபற்றி, ஆடிப்பாடியும் மகிழ்ந்தார்கள். தமிழர் தேசத்து இளைய சமூகம் எங்கே நிற்கின்றது? என்ற கேள்வியை இந்த நிகழ்வு எழுப்பி நிற்கின்றது. சிங்கள அரசாங்கங்கள் சொல்வதைப்போல், 'ஒரு குழுவினர்' மாத்திரமே உரிமையைக் கோருகின்றனர் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் இந்தச் செயல் அமைந்திருக்கின்றது. இதற்குத் தனித்து இளைய சமுதாயத்தை மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. தமிழர் தேசத்துக்கு விடுதலை கிடைக்கவில்லை என்ற உணர்வையும், கரிநாளாக கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஓர்மத்தையும் உரியவகையில் அந்தச் சமூகத்திடம் கொண்டு சென்று சேர்க்கத் தவறிய அரசியல் தலைமைகளும், சிவில் அமைப்புக்களுமே பொறுப்புக்கூறவேண்டும்.

ஏனெனில் பெப்ரவரி 11 ஆம் திகதி மூன்று தரப்புகள் வெவ்வேறுபட்ட நேரங்களில் ரணிலுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்திருந்தன. ஒவ்வொரு கட்சியும் தனக்கான சுயநல அரசியலை முன்னிலைப்படுத்துவதாலேயே, போராட்டங்களில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கையும் குறைவடையத் தொடங்கியுள்ளதோடு, மக்களுக்கு இத்தகைய ஜனநாயகப் போராட்டங்கள் மீதான நம்பிக்கையும் தேய்ந்துவருகின்றது. குறிப்பாக பெப்ரவரி 11 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டத்தில் அந்தக் கட்சியைச் சேர்ந்தோரைத் தவிர மக்களின் பங்களிப்பு அறவே இருக்கவில்லை. எதையும் குழப்புவதனூடாக அல்லது தனித்துச் செயற்படுவதனூடாக 'நாங்கள் வித்தியாசமானவர்கள், கொள்கைப்பிடிப்பானவர்கள்' என்று காட்டமுனையும் முன்னணியின் போக்கானது தமிழர்களின் ஒற்றுமையை வெளிக்காட்டத் தடையாகவே உள்ளது. அண்மையில்கூட, பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட 'வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி' நடத்தப்பட்ட எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு தெரிவிக்க '13 ஐ ஏற்றுக்கொள்ளவில்லை' என மாணவர்கள் உறுதிதரவேண்டும் என்று முன்னணி விதித்த நிபந்தனை, அவர்களின் அரைவேக்காட்டு அரசியலுக்கு சமீபத்திய உதாரணம். ஆனாலும், ஒற்றையாட்சியையோ, 13 இனையோ ஏற்கமறுக்கும் முன்னணியினர் அதே ஒற்றையாட்சிக்குட்பட்ட நாடாளுமன்றிலும், உள்ளூராட்சிசபைகளிலும் பங்கெடுப்பதும், 13 ஆல் உருவான மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட இருப்பதும் அவர்களின் கொள்கைப்பிடிப்பென்பது சந்தர்ப்பவாத அரசியலே என்பதை தோலுரித்துக் காட்டுகின்றது.


மறபுறத்தில், ரணிலுக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்துகொண்டிருந்தவேளையில் தனித்துச் சென்று அவரைச் சந்தித்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன். ரணிலுடன் அவர் பேச்சு நடத்தியது தவறல்ல. ஆனால், காலநேரம் முக்கியமானது. எல்லோரையும் பிரித்தாள்வதில் வல்லவரான ரணிலைப் பற்றி, வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது விக்னேஸ்வரன் என்னவெல்லாம் சொன்னார் என்பதெல்லாம் மக்கள் அவ்வளவு இலகுவில் மறந்திருக்கமாட்டார்கள். அவ்வாறான சூழலில், ரணிலுக்கு எதிரான போராட்டம் நடந்து கொண்டிருக்கையில்தான் அவரை தனித்துச் சந்தித்துப் பேசவேண்டுமா? என்ற கேள்விக்கும் விக்னேஸ்வரனிடமிருந்து தெளிவான பதில் இதுவரை வரவில்லை. போராட்டச் சூழலிலிருந்து விக்னேஸ்வரனைப் பிரித்துக் கையாண்டிருக்கின்றார் ரணில். கரிநாள் என்று அறிவித்து ஒரு புறம் தமிழ்த் தேசியக் கட்சிகள் போராட, மறுபுறம் அதே தேசியத்தைப் பேசும் தலைவர் என்று கூறப்படும் விக்னேஸ்வரனுடன் ரணில் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

தமிழ்த் தேசியத்தை பிரதிபலிக்கின்ற இத்தகைய அரசியல் தரப்புக்கள் ஆளுக்கொருபுறம் தங்கள் கதிரைகளுக்காக – பதவிகளுக்காக – பவிசுகளுக்காக முட்டிமோதிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்த் தேசிய அரசியல் மீதான விரக்தியை இளைய சமுதாயத்திடத்தில் விதைத்துக்கொண்டிருப்பதில் அவர்களுக்கும் பெரும் பங்கு இருக்கின்றது. இவை எல்லாம் இப்போது ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசிய இளையோரை திசைமாற்றிச் செல்கின்றது. சுருங்கச் சொன்னால் எமது கைகளை வைத்தே எங்கள் கண்களைக் குத்தி விட்டுச் சென்றிருக்கின்றார் ரணில்.

### நாளொரு நல்வார்த்தை

"ஒரு நல்ல நூலைப்போலச் சிறந்த நண்பனும், நெருக்கமான உறவினனும் எனக்கு வேறு இல்லை"

– அறிஞர் அண்ணா



# மின்கட்டண அதிகரிப்பின் சூத்திரதாரி ஐ.எம்.எப்.!

## ஒப்புக் கொள்கிறது அரசாங்கம்



கொழும்பு, பெப். 18

பொருளாதார மீட்சிக்கு கடுமையான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது. மின்கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர மாற்றுவழியேதும் கிடையாது, என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் மின்சாரசபையின் மாத வருமானம் தொடர்பில் வங்கிக் கட்டமைப்புக்கு நம்பிக்கை தோற்றம் பெற்றுள்ளது. நிலக்கரிக் கொள்வனவுக்கு இலங்கை வங்கி 22 பில்லியன் ரூபாவை மேலதிகமாகவும், புதுப்பிக்கத்தக்க சக்தி வள விநியோகஸ்தர்களுக்கு நிலுவைத் தொகையை வழங்க மக்கள் வங்கி 50 பில்லியன் ரூபாவும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

மின்னுற்பத்திக்கான செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காகவே மின்கட்டணம் தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிறிலங்கன் எயார் லைன் விமான சேவைகள் நிறுவனத்துக்கு திறைசேரி நிதி வழங்குவதை நிறுத்திக் கொள்ளவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்களுக்கு இனி நிதிவழங்கப் போவதில்லை என்ற தீர்மானத்தை திறைச்சேரி கடந்தமாதம் முதல் செயற்படுத்துகிறது. இதற்கமைய மின்னுற்பத்திக்குத் தேவையான செலவை இலங்கை மின்சாரசபை திரட்டிக் கொள்ளவேண்டும். இவ்வாறான பின்னணியில் தான் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் ஒரு கட்டத்தை மின்கட்டண அதிகரிப்பு ஊடாக நிறைவேற்றியுள்ளோம்.

மின்கட்டணத்தை இனி அதிகரிக்க வேண்டிய தேவை கிடையாது. எதிர்வரும் ஜுலை மாதம் மின்கட்டணத்தை குறைக்க எதிர்பார்த்துள்ளோம். இந்திய அரசாங்கத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் தேசிய பெறுகை அடிப்படையில் புதுப்பிக்கத்தக்க சக்திவள திட்டத்தை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்நிலுவைக் கட்டணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகளின் மின்சார நிலுவைக் கட்டணத்துக்கு மாத்திரம் விசேட சலுகை வழங்கப்படும். ஏனைய தரப்பினர் தமது மாத மின்கட்டணத்தையும், நிலுவைக் கட்டணத்தையும் உரிய காலத்தில் செலுத்தவேண்டும் இல்லாவிடின் மின்விநியோகம் துண்டிக்கப்படும்.

போராட்டங்களுக்கு அடிபணிந்து மின்கட்டண திருத்தத்தை மீள்பரிசீலிக்கப் போவதில்லை. மின்கட்டண அதிகரிப்பை தொடர்ந்து பொருள் மற்றும் சேவைக் கட்டமைப்பின் கட்டண அதிகரிப்பை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தமுடியாது. ஆகவே அரச சேவைத்துறை ஊடாக நிவாரணம் வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஒ-இ)

**நாளை** 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை மாசி 07

சுபநேரம் : 09.32 - 11.02

ராகுகாலம் : 05.02 - 06.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் கதைப்பதற்கு கற்றுக்கொடுக்க ஆசிரியர் தேவை

எமது விடுதிக்கு வரும் சுற்றுலா பயணிகளுடன் சிங்களத்தில் கதைப்பதற்கு எனக்கு சொல்லித் தருவதற்கு ஆசிரியர் தேவை.

அன்ரன் - 077 613 8964

## பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த பெண்ணை தங்கி நின்று பராமரிக்க பணிப்பெண் தேவை.

077 069 8105

## நாஹறா மருத்துவ நிலையம்

கை, கால் விறைப்பு, செயலிழப்பு, தீராத முழங்கால் பாதிப்பு பாரிசவாதம், மாறாத புண்கள், நீரிழிவு, அல்சர் - சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

T.P.: 077 321 2740


## மன்னிப்புக்கோரல்

மடுக்குளம், வேலங்குளம், பூவரசன்குளம், வவுனியா என்ற முகவரியில் வசித்துவரும் மலர் மயூரன் ஆகிய நான் பொலிசாரினால் அனுமதிப்பத்திரம் இன்றி மருந்துப் பொருட்களை உடமையில் வைத்திருந்ததாகக் கூறி தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 131 கீழ் 55430 என்ற வழக்கு இலக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதனை ஏற்று இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறை செய்யமாட்டேன் என உறுதிப் படுத்துகின்றேன்.

நன்றி.

CS 1084 (1-6)

மலர் மயூரன்

PEOPLE'S BANK

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
### சுத்திகரிப்புச்சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை , யாழ். பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும், யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/-ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2023 பங்குனி 08ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00 – பி.ப 4.00 மணிவரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2023 பங்குனி 09 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம், இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

Fax : 021-2222602 E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-2222601 /0212228602

## கண்ணீர் அஞ்சலி

யா/ யூனியன் கல்லூரி 96 A/L பழைய மாணவன்
திரு.அரவிந்தன் ஸ்ரீஸ்கந்தராஜா
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா சுசிலாதேவி



அவர்கள் கடந்த (15.02.2023) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாங்கள் மிகவும் வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவுத் துயர் பகிரும்
யா/ யூனியன் கல்லூரி நண்பர்கள் குழு (96 உயர்தரம்)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## திரு. சின்னையா சிவசுந்தரம் (சுந்தரம் பத்தர்)



தண்ணீரூற்று முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவசுந்தரம் 11.02.2023 அன்று யாழ்ப்பாணத்தில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அகிலாண்டேஸ்வரியின் அன்புக் கணவரும், வளர்மதி, கோமதி (ஜேர்மனி), செந்தில்க்குமரன், பாமதி (ஆசிரியை - தண்ணீரூற்று இ. த.க. பாடசாலை), பூமதி (சுவிஸ்), அருள்மதி (ஆசிரியை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கலைமதி (ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி), புகழரசி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இலங்கேஸ்வரன், கிரிதரன் (ஜேர்மனி), சிவப்பிரியா, யோகராஜன் (கிராம உத்தியோகத்தர் - கணுக்கேணி கிழக்கு), பாலகுமார் (சுவிஸ்), அகிலன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), உதயகுமார் (விமலா ஹோல்ட் ஹவுஸ் - யாழ்ப்பாணம்), விஜயரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான நாகம்மா, நாகரத்தினம், இராசரத்தினம், அரசம்மா அன்னப்பிள்ளை, குமாரைய்யா மற்றும் செல்லம்மா (தண்ணீரூற்று) ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr.ஷாலுஜா (Dental Surgeon, யாழ்ப்பாணம்), மதிநுதன் (Engineer, கொழும்பு), மதிநுஷான் (பொறியியற்பீடம், பேராதனை), மதிலஜனன் (பொறியியற்பீடம் - மொரட்டுவை), நர்த்தகி (ஜேர்மனி), சிவதேனிஜன், சுகிவர்ணவி, வதுர்ஷா (சாவகச்சேரி - இந்துக் கல்லூரி), கர்மிகன் (வித்தியானந்தா கல்லூரி), நிஷானி, அனுஷன் (சுவிஸ்), அம்சவி, அக்ஷிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அஸ்விதன் (யாழ். இந்துக்கல்லூரி), சதுர்த்திகா, தேவஹரி (கொக்குவில் இந்துக் கல்லூரி), விஷ்னுஜா, டருண் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தண்ணீரூற்று முள்ளியவளையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தண்ணீரூற்று கற்பூரப்புல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 25.07.1935 | மறைவு 11.02.2023 | தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை. | தகவல்: குடும்பத்தினர் மகன் - 077 9439 333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரியையொட்டி
# மரக்கறிகள் விலை சடுதியாக உயர்வு!

யாழ்ப்பாணம், பெப். 18

சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் வழமையை விடவும் அதிகரித்துக் காணப்பட்டன. அத்துடன் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடும் நிலவியது என நுகர்வோர் தெரிவித்தனர்.

சந்தையில் கிலோ 150 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் நேற்று கிலோ 300 ரூபாவாக அதிகரித்துள்ளது.

பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவுக்கும் பாவற்காய் கிலோ 400 ரூபாவுக்கும் மரவள்ளிக்கிழங்கு கிலோ 200 ரூபாவுக்கும் போஞ்சி 400 ரூபாவுக்கும் பச்சைமிளகாய் கிலோ 300 ரூபாவுக்கும் தக்காளி கிலோ 300 ரூபாவுக்கும் கீரை ஒருபிடி 120 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

### தேவை

புத்தகக்கடை, போட்டோகொப்பி வேலை தெரிந்த / பழக விரும்பும் பெண்பிள்ளைகள் தேவை.

**077 3144 612/ 075 3144 611**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகத்தில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலக தளபாடங்கள், கணினி உபகரணப்பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத/பாவனைக்குத் தேவைப்படாத பொருட்கள்ள பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் கிளிநொச்சி வளாக பொதுநிர்வாகக்கிளையுடன் தொடர்புகொண்டு குறித்த தினத்தில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 03.00 மணிவரை மட்டும் பார்வையிடலாம்.(தொடர்பு இலக்கம்- 021 206 0180)

**ஏலவிற்பனை நடைபெறும் இடங்கள்.**

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப்பொருட்கள் | 23.02.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை | 24.02.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி |

ஏலவிற்பனையில் பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் அனுமதிக் கட்டணமாக ரூபா 2000.00ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 970000060000276 என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஏலப்பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் 24.02.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 15,000.00 ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக நிதிக்கிளையில் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து ஏலவிற்பனையில் கலந்து கொள்ளமுடியும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக நிதிக்கிளையில் பணமாக உடன் செலுத்தி அன்றைய தினமே பொருட்களை முழுமையாக எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

**குறிப்பு: மீளளிப்புச்செய்யக்கூடிய தொகையை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றவர்கள் மாத்திரமே ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# என்றும் நீங்காத நினைவலைகள்

## 1 ஆம் ஆண்டு 2 ஆம் ஆண்டு

தோற்றம்
18.02.1931



மறைவு
01.03.2022

**அமரர் கணபதிப்பிள்ளை சரவணமுத்து**
(இளைப்பாறிய தபாலதிபர்)
திதி: சதுர்த்தசி

தோற்றம்
30.06.1937



மறைவு
05.05.2020

**திருமதி தனலட்சுமி சரவணமுத்து**
திதி: திரயோதசி

அன்புடனும் பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டிய
மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்களான அப்பா, அம்மா
இருவரினதும் ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களது இதயத்தில் (19.02.2023)
உங்களது நினைவை நிறுத்தி உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs 23371) (2-6)

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தொ.பே:. 077 400 4026

பிள்ளைகள்

# குட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்
## KUDDY FILTER WATER

வல்வெட்டித்துறையில் இப்போது புத்தம் புது பொலிவில் 100% தூய்மையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**1 லீற்றர் - 4.00 ரூபாய்**

வன்னிச்சி அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை. **076 121 4330**

# வேலையாள்கள் தேவை

முல்லைத்தீவிலுள்ள பண்ணையில் தங்கி வேலை செய்யும் ஆட்கள் தேவை. கால்நடைகள் பராமரிப்பவர், விவசாயம், சமையல் வேலைகள் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு. உணவும் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும். சம்பளம் 36,000 இலிருந்து 45,000 வரை. அனுபவத்திற்கு ஏற்ற மாதிரியும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதன் மூலமும் அதிகரித்துக் கொடுக்கப்படும். தேசிய அடையாள அட்டை, வங்கிக்கணக்கு உள்ளவர்கள்.

**வயது 18 - 45 வரை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புகளுக்கு:-**

(CR/39266) 4-6


**முகாமையாளர் :- 077 429 2500**
**தங்கராணி பண்ணை:- 021 229 1578, 076 257 4690**

# பூசகர் தேவை

**ஆதி மயிலிட்டி**
**காசி பூதராயர் ஆலயம்,**
**மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை**
என்ற முகவரியில் அமையப் பெற்றுள்ள எமது **ஆலயத்திற்கு நித்திய பூசை செய்வதற்கு அந்தணகுலத்திலுள்ள பூசகர் ஒருவர் எதிர்வரும் 25.02.2023 முன்பதாகத் தேவைப்படுவதனால்** ஆர்வமுள்ள பூசகர்கள் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும் சம்பளம் நேரடியாகப் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 319 0583**
நிர்வாகம்
**ஆதி மயிலிட்டி காசி பூதராயர் ஆலயம்,**

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.06.1930 மறைவு 11.03.2013

அமரர்
**சுப்பிரமணியம் சபாரத்தினம்**
(முன்னாள் ஈழநாடு பத்திரிகை பேராசிரியர்)

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
பத்து ஆண்டாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

(CS 23518) 1-6

25/1, வைமன் வீதி,
நல்லூர்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 • 03 • 1967



இறப்பு 17 • 02 • 2023

## இரட்ணசிங்கம் கேதீஸ்வரன்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)

நாவலர்லேன், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிட மாகவும் கொண்ட இரட்ணசிங்கம் கேதீஸ்வரன் நேற்று (17.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் இரட்ணசிங்கம் நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், மோகனாம்பாளின் (தயா) அன்புக் கணவரும், கஜேந்திரன் (க்வி), டினேஸ் (டினா), சண்ஜா, மயூட்சன் (மயூ) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன்,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 213 1448

(cs23368) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 • 07 • 1945



மறைவு 16 • 02 • 2023

## திருமதி சறோஜினிதேவி(வடிவு) தம்பிராசா

6ஆம் வட்டாரம், வேலணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி (வடிவு) தம்பிராசா 16.02.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தவனம் - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும், தம்பிராசாவின் மனைவியும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, திருநாவுக்கரசு, பூமணி, கமலாதேவி ஆகியோரின் சகோதரியும், சந்திரசேகரம், மகாலிங்கம், சித்திரவடிவேல், காலஞ்சென்றவர்களான பூமகள், திருமகள் மற்றும் சிறிகாந்தன் ஆகியோரின் மைத்துனியும், சித்திராங்கனி, சிறிவேணி, வாகீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகிர்தன், திலீபன், கீதா ஆகியோரின் மாமியாரும், கணேஸ், கரீஸ், சோபனன், கௌசான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

க.தம்பிராசா
வேலணை மேற்கு, 6ம் வட்டாரம்,
வேலணை.

(CS/23505)4,6

தகவல்:
குடும்பத்தினர்.
077 773 2892

# மரண அறிவித்தல்



## திரு. சுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி (ராசா)

(முன்னாள் அம்பாள் ஸ்ரோஸ் உரிமையாளர் - கல்கமுவ)

தோற்றம் 28.02.1940

மறைவு 15.02.2023

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி (ராசா) கடந்த (15.02.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான T.K. அப்புத்துரை (பொத்துவில்) பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் (குஞ்சுப்பா) அன்புக் கணவரும், கல்பனா (கனடா), ரமணன் (அவுஸ்ரேலியா) காலஞ்சென்ற ஆதவன் (ஊவா), தக்ஷனா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாமரைச்செல்வன் (குமணன்- கனடா), அபிராமி (அவுஸ்ரேலியா), அபிமன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரினி, ஸ்ருதி, ஆதனா, இளங்குமரன், ஆதுஷன், ஆதிரன், அனனியா ஆகியோரின் பாசமிகு பேரனும், இராமலிங்கம், சிவநாதன், தற்பராதேவி, யோகநாதன், லோகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன், வனிதாமணி மற்றும் செல்வக்குமாரி, ஸ்ரீகுமார், சாந்தினி, ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சந்திராதேவி, லோகநாதன், இராஜேந்திரன் மற்றும் பாஸ்கரன், நந்தினி, ராதை ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, சிவஞானலிங்கம், இன்பலிங்கம் மற்றும் கனகரூபவதி, பிரேமகுமாரி, வைரவநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பகல் 1.00 மணிக்கு பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64, சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
மனைவி - 075 326 1954
021 223 0617

(cs.23508) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகா சிவராத்திரி

கே.எஸ்.சிவஞானராஜா.

**“எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும் சைவசமயிகளுக்கு முதன்மையாக விளங்கும் விரதம் சிவராத்திரி. தொல்லை வினைதீர வல்லதோர் விரதம் இதுவெனப் பல்லோரும் மிகவும் பயபக்தியோடு இதனை அனுஷ்டிப்பார்கள். மண்ணவரும் விண்ணவரும் கண் அயராமல் சிவபெருமானை உளமாரப் போற்றி வணங்கும் தலையாய விரதம்.**

மன்னாரில் அருளாட்சி புரியும் திருக்கேதீஸ்வரம் திருத்தலத்தில் சிவராத்திரி விரதம் மிகவும் மகோன்னதமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இருந்தாலும் ஏனைய சிவாலயங்களிலும் சிவராத்திரி விரதம் பக்திச்சுவை சொட்டுமாறு அனுஷ்டிக்கப்படுகிறது. திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம், முனீஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், தொண்டீஸ்வரம், வைத்தீஸ்வரம், பசுபதீஸ்வரம் ஆகிய ஆலயங்கள் சிவராத்திரி விரதத்திற்கு முதன்மையளித்துப் பேறு தருகின்றன.

பொதுவாகச் சிவாலயங்கள் ஆகம விதிகளுக்கமைவாகவே அமைக்கப்படுகின்றன. அல்லாமலும் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம், அற்புதம், அதிசயம், அருளமுதம், ஆனந்தம், அபிஷேகம், அக்ஷயம், அட்சரம் சித்திகரமாகவே அத்தனை ஆலயங்களும் அருளாட்சி புரிவதனால் அனைத்துச் சிவாலயங்களிலும் சிவராத்திரிக்கு அதிமுக்கியமான இடம் அளிக்கப்படுகிறது. மேலும் சிவத்தோடு சம்பந்தப்படுவோர் மிகமிக ஆசார சீலராகவும், மிகவும் தூயநடத்தை உடையவராககவும், எதுவித குற்றங்களிலும் அகப்படாதவராகவும், அரசியலுக்குள் சிக்குப்படாதவராகவும், பேராசை வலைக்குள் ஏமாற்றப்படாதவராகவும் - ஏமாறாதவராகவும், பஞ்சமாபாதகங்களின் பக்கம் நெருங்காதவராகவும், சிவசொத்துக்களை கபளீகரம் செய்யாதவராகவும், குற்றமுள்ள சொற்பிரயோகம் பிரயோகிக்காதவராகவும், பொதுவான நிதி, நீதி, நிர்வாக, நித்தியப் பொறுப்புக்களுக்குப் பொறுப்புக் கூறுபவராகவும், உடை, நடை, பாவனை கலாசாரத்தினை மீறாதவராகவும், ஒவ்வொரு சதத்தினையும் அவம்போகாமல் அதனைத் தவமாக்குபவராகவும் இருக்கவேண்டுமென்றே இந்த “சிவந்த மண்” தவமிருக்கின்றது.

ஆனால், சிவராத்திரி விரதமோ படிப்போ, பட்டமோ, பதவியோ, பல்கலைக்கழகமோ, பணமோ, படாபடோபமோ, பரபரப்போ இல்லாத ஒரு சாதாரண பாமர கானகத்து வேடனோடு சிவபெருமான் மனதாரப் புரிந்து ஏற்ற ஒரு பயபக்தியான திருவிளையாடல் என்றே கூறமுடியும். வேடன், வில்வமரம், வில்வம் இலை, சிவலிங்க பாவனை, மன ஒருமைப்பாடு, பிரார்த்தனை, மெளனம் ஆகியவையே இறைவனை நெக்குருக வைத்ததென்றால் நமது மேடைகளும் கூத்துக்களும் பிரமுகர்களும் படும்பாட்டுக்கு இறைவனே தோற்றுப்போய் கட்டப்பட்டுள்ளார். இறைவன் எப்படிச் சங்கட்படுவார் என்பதை இங்கு எவரும் புரிந்ததாகத் தெரியவில்லை. சிவாலயத்தில் ஆறஅமர ஆடம்பரமில்லாது ஓரிடத்தில் பொறுமையாக இருந்து “ஓம் நமசிவாய, ஓம் சிவாய நம” என எல்லோரும் ஒரே குரலாக விடிய விடிய உச்சரித்தால், சிவபெருமான் ஒரு கோடியை உச்சரிக்கும்போது இலிங்க வடிவிலும் ஜோதி வடிவிலும் பிரகாசிப்பார். நற்றுணையாவது நமச்சிவாயவே ஆகும். நமச்சிவாயப் பதிகங்கள் யாவுமே சிவனை அடைவதற்காகவே அருளப்பட்டுள்ளன.

இதைவிடுத்து ஆலயங்களில் நீட்டி நிமிர்ந்து சயனிப்பதற்காகவும் ஜனரஞ்சகமான உணவு, உடை, உடல் கொண்டாட்டங்களுக்காகவும், அரசியல் காப்பியத் தீர்வுகளுக்காகவும், கைதட்ட வைக்கும் தர்க்க குதர்க்க வாதங்களுக்காகவும், ஒலி, ஒளி மேடை அமைப்புக்காகவும், சுடச்சுட விற்பனை செய்யப்படும் ஆரவார ஆகாரங்களுக்காகவும் சிவராத்திரி விரதம் சோடை போகக்கூடாது. விடிய விடிய வில்வம் இலைகளை பறித்துப் போட்ட கானகத்து வேடனுக்கு சிவமுக்தியும் பேரின்பமும் கிடைக்கப்பெற்ற நிலையில், நாமோ அரை நிமிசம்கூட ஆற அமர சப்பாணி கட்டி இருந்து வழிபாடியற்றத் தெரியாமல் பறந்து திரிந்து சமயப்போலிகளாக மேடைக்குப் பாரமாக பொறுப்புக் கூறும் எந்தமக்கு. இனியாவது தம்மையே தாம் புகழ்ந்து பேசாமல், தாமே தமக்குப் பட்டம் போட்டு மேடையில் தாளித்து சட்ணி போடாமல், மூலஸ்தானத்தில் நடைபெறும் அபிஷேக ஆராதனை வழிபாடுகளிலும், எழுந்தருளி மண்டபத்தில் நடைபெறும் சமய சம்பிரதாய வேதமந்திர இசைநாத மங்கள வாத்திய சமர்ப்பணங்களோடும் ஒன்றிக் கலந்து வழிபாடியற்றுவதே சிவராத்திரியின் தாற்பரியமாகும். சாத்தியமாகுமா? சிவராத்திரி விரதமானது சாத்திரப்படிக்கோ, கடமைக்கோ, பெயருக்கோ, நிகழ்ச்சி தயாரிப்பதற்கோ, ஆரார் வந்தார் என்று வரவு பதிவதற்கோ, சுகநலம் விசாரிப்பதற்கோ, அன்பு பேணுவதற்கோ, அரசியல் விமர்சனம் செய்வதற்கோ, தொலைபேசியில் உரையாடுவதற்கோ, படம் பார்ப்பதற்கோ, பைம்பல் அடிப்பதற்கோ, மதுபோதையில் மூழ்குவதற்கோ கண்டிப்பாக ஏற்றதல்ல! ஓம் நமசிவாய மந்திரம் மட்டும் விடியவிடிய எல்லோரும் சேர்ந்து ஆறுதலாக சுவை சொட்டுமாறு ஆயிரமாயிரமாக உச்சரித்தாலே சிவன் மகிழ்ந்து, மனமிரங்கி வரமருளுவார். நடக்குமா?

சிவபெருமானுக்குரிய எட்டுவிதமான விரதங்களுள் மிகவும் பிரதானமான வரங்களை நல்குவது மகா சிவராத்திரியாகும். தனம், கல்வி, [illegible] டிவு, வஞ்சமிலா [illegible] பதவி, ஆரோக்கியம், நீடித்த ஆயுள், பாதுகாப்பு, நோயின்மை, ஒற்றுமை, புலமை, எளிமை, சிக்கனம், திருமணம் யாவும் சித்திக்கும். எதற்கும் உன்னை நீயே விளம்பரப்படுத்தாதே! ஆமாம்! பிரம்மா விஷ்ணுவின் செருக்கை அடக்கியதே இந்த விரதமாகும். சகல ஜீவாத்மாக்களும் இறைவனிடத்தில் இரண்டறக் கலந்து நிற்கும் சாயுச்சிய நிலையில் பேறுகொள்வதற்காகவே இந்த புண்ணிய சிவராத்திரி விரதம் மகிமை தருகிறது. இவ்வாறு உலகம் சிவனிடத்தில் ஒடுங்கும் நிலையறிந்து பார்வதி அம்மா மக்களின் சேமம் கருதி சிவனை நினைந்து பூஜித்த தினமே சிவராத்திரி ஆகும். இவ்விரதத்தை உரியவாறு அனுஷ்டித்த விஷ்ணுபகவான் சக்ராயுதத்தையும், இலக்குமியையும் வரமாகப் பெற்றார். ஆமாம் நாமும் பெறலாம்.

பிரம்மதேவர் இவ்விரதத்தை நோற்றதன் பலனாக சரஸ்வதியைப் பெரும் பேறாகப் பெற்றார்.

இராஜசேகரப் பாண்டியன் சிவனுக்கு நான்கு சாமப் பூஜைகளையும் மிகுந்த பயபக்தியுடன் நிறைவேற்றியதன் பிரகாரம் சிவபெருமானை கால்மாறி ஆடச் செய்து பேரின்பப் பேறு பெற்றான் என்று திருவிளையாடற்புராணம் சான்று பகரும். மேலும், தெரியாமல் செய்த பாவங்களும் தெரிந்து செய்த பாவங்களும் சிவராத்திரி விரதத்தின் பலனாக அறவே நீங்கி ஆன்மீக பலம் கிட்டும். நூறு அஸ்வமேத யாகம் செய்தாலும், ஒரு சிவராத்திரிக்கு ஈடாகாது. முத்திக்கு வழிகாட்டும் அற்புதமான விரதம் இது ஒன்றேயாம். திருக்கேதீஸ்வர ஆலயத்தின் கண்ணமைந்த தீர்த்தமாம் பாலாவியில் தீர்த்தமாடினால் சிவராத்திரியில் கேட்டதும், நினைத்ததும், விரும்பியதும், வேண்டத்தக்கதும், வேண்ட மறந்ததும், வரமாகப் பெறலாம். சந்ததிகளுக்கு வாய்ப்பான விரதம் இதுவாகும். பயபக்தியே ஆதாரமாகும்! அது இருந்தால் அல்லல் என் செய்யும்? அருவினை என் செய்யும்? நாமோ பேராசையில்....!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது யானை

முல்லைத்தீவு, பெப். 18

மாங்குளத்துக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடைப்பட்ட மேளீவனம் பகுதியில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மேளீவனம் பகுதிக்குச் சென்ற மீனவர்களால் யானை இனங்காணப்பட்ட நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர், யானையின் ஒருகால் காயமடைந்து உயிரிழந்த நிலையில் யானையை மீட்டனர். யானையின் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஓ-14-19)


**க.பொ.த.(உ/த) பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களுக்கான கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு**

மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல், குறுகியகால கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

**இடம் :** இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**திகதி:** 25,26/02/2023, 10:00 AM சனி, ஞாயிறு

**விடயம்:** "உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களுக்கான கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு"

**பிரவேசம் இலவசம்**

மேலதிக விபரங்களுடன் தொடர்புகட்டு

**021 434 0229 / 076 68 52 529**

நிர்வாகம்.

(CS 23524)1-6



## நிரந்தர வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள பெண்களுக்கான அழகுக்கலை மற்றும் கற்கைநெறி நிறுவனத்தில் பெண் அழகுக்கலை நிபுணர் வெற்றிடம் உண்டு.

தேவையான தகைமை:-

* NVQ 3 அல்லது NVQ 4 கற்கை நெறி
* குறைந்தது 1 வருட தொழில் அனுபவம்

**சம்பளம்-**

அடிப்படை - 20,000/=

மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.

**தொடர்பு: 0777 869 760**

(CR 39279) 1-6



## விநியோகஸ்தர்கள் தேவை

AJ MASALA

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி

மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் எமது மசாலா உற்பத்தி நிறுவனமானது தற்போது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு புதிய விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கிறது.




**தகைமைகள்**

* வங்கி உத்தரவாதம் 1 மில்லியன்.
* சொந்த வாகனம் / போக்குவரத்து வசதி கொண்டிருத்தல்
* 7% விநியோகஸ்தர் மார்ஜின்
* பண கொள்வனவிற்கு மேலதிக 2%
* கம்பெனி விற்பனை பிரதிநிதி

More Info Call Us:


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. அருணாசலம் சிதம்பரநாதன்



தோற்றம் 16.03.1933 — மறைவு 04.03.2019

திதி: திரயோதசி (18.02.2023 சனிக்கிழமை)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நான்காண்டு ஆனாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
அப்பாவே!

நினைவுகளுடன்

(CS 23378) (2.6)

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக"

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அப்பாத்துரை சாம்பசிவம்

மலர்வு 24.12.1926 — திதி:- 18.02.2023 திரயோதசி — உதிர்வு 09.02.2021

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் எம்மை வழி நடத்தினீர்கள்.
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
சிறப்புடன் வாழ்ந்தீர்கள்.
எம் வாழ்வுள்ளவரை என்றும் நீங்கள்
எம் இதயங்களில் வாழ்வீர்கள்.
இன்னொரு பிறப்பு உண்டெனில்
நீங்களே வேண்டும் எம் அப்பாவாக

நினைவுகளுடன்...
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 23522) 1-6

## மரண அறிவித்தல்



### திரு.சின்னையா நவரட்ணராஜா

கைதடி கோவிலாக்கண்டி மத்தியை பிறப்பிடமாகவும், நுணாவில் சந்தி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னையா நவரட்ணராஜா அவர்கள் நேற்று (17.02.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா (வன்னியசிங்கம்) தனலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தினி அவர்களின் பாசமிகு கணவரும், அஜந்தா (இத்தாலி), கஜிதா (பிரதேச செயலகம்- பச்சிலைப்பள்ளி), சுஜந்தா (ஜேர்மன்), சுகிர்தா (எவர்கிறீன் வைத்தியசாலை- சாவகச்சேரி), யரூண் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன், வசீகரன் (ஸ்ரூடியோ), கஜவதன், றமணன் (சாரதி), தாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிசான்யா, அபிசன், பவனுஜா, லக்ஷன், கனிகா, கவீனா, நிகாஷ், துவேணிகா, நவினாஸ், லோய்ஷ்னா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் இரட்ணசிங்கம், காந்தலக்ஷ்மி, யோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நுணாவில் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 10 99 65

(CR 39280) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறன் வகுப்பறை கணினியில் தனிப்பட்ட ஒளிப்படங்கள்

## வடக்கு ஆளுநர் செயலகத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 18

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலையொன்றில் திறன்வகுப்பறைக் கணினியில் ஆசிரியர்களின் குடும்ப உறுப்பினர்களின் ஒளிப்படங்கள் சேமித்து வைக்கப்பட்டமை தொடர்பில் ஆளுநர் செயலகத்துக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் மாணவர்களின் தகவல் தொழில்நுட்பக் கல்வியை விருத்தி செய்யும் முகமாக திறன் வகுப்பறைக் கணினிபாடசாலைகளில்நடைமுறைப் படுத்தப்படுகிறது.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கென வழங்கப்படும் கணினியில் வடக்குமாகாணகல்வித்திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலையொன்றின் ஆசிரியர்களால் திருமணப் புகைப்படங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஒளிப்படங்கள் சேமித்து வைக்கப் பட்டன.

சக ஆசிரியர் ஒருவரால் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கும் முறைப்பாடளிக்கப்பட்டது.

அதையடுத்து இந்தவிடயம் தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் பாடசாலைகளில் இதுபோன்ற விடயங்கள் இடம்பெறாது இருப்பது தடுக்கப்பட வேண்டும். அதற்குப்பொருத்தமானநடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநரின்செயலாளர்மற்றும்வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மேற்கொள்ள வேண்டும் என எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-27)

### இந்துசமயப்...

திருநெறிய தெய்வீக இசை ஆராதனை நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேரவை நடராஜர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் முன்னாள் இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீஸ்கந்தசாம்ப சிவ சிவாச்சார்ய சின்மமுக்கு 'சிவபூஜாக் கிரம ஜோதி' விருது தேகாந்த நிலையில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

மேலும் தேகாந்த நிலை கலைஞர்களுக்கான லயஞான குபேரபூபதி விஸ்வலிங்கம் தெட்சணமூர்த்திக்கு 'லயஞான லாவண்யப் பேரரசு' விருதும், விவகார வித்வமணி என்.ஆர். சின்னராசாவுக்கு 'சுரஞான கரவேக சிம்மம்' விருதும், கலியுக வரத சுரதாளக்கியான பாலநந்தீஸ்வரர் கே.பழனிமலைக்கு 'சுரஞான கரவேக பூமி' விருதும், வயலின் வித்துவான் இளையஞான திலகம் உருத்திராபதி இராதா கிருஷ்ணனுக்கு 'இசைஞான சக்கரவர்த்தி' விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் சைவத்தமிழ் எழுச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனுக்கு 'பரசமய துவம்ச கோளரி' விருதும், பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியில் வீர உணர்வை வெளிக்கொணரும் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கு 'ஊடக சாம்ராச்சியப் பேரரசு' விருதும் வழங்கப்படவுள்ளன என்று இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திக்கிரீவன் அறிவித்துள்ளார். (ச-இ)

### பிக்குகளின்...

தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் பிக்குகள் நடத்திய போராட்டம் தொடர்பிலும், அவர்கள் ஜனாதிபதிக்கு விதித்துள்ள காலக்கெடு தொடர்பிலும் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஜனாதிபதி ரணிலிடம் கேள்வி எழுப்பினார்.

'பிக்குகள் எமது நாட்டில் எல்லோராலும் புனிதத்தன்மையோடு மதிக்கப்படுபவர்கள். அவர்களின் இந்த அவசர நடவடிக்கை தொடர்பில் என்னால் ஒன்றும் புரிந்துகொள்ளமுடியவில்லை. அண்மையில் மகாநாயக்கர்களை நேரில் சந்தித்தபோது அரசமைப்பின்13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலும் அதை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் இலங்கையில் ஏற்படவுள்ள இன - மத நல்லிணக்கம் தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தேன். அவர்களும் எனது கருத்தை வரவேற்றிருந்தார்கள். அதன் பின்னர் கொழும்பில் பெரும் போராட்டத்தை பிக்குகளில் ஒரு பகுதியினர் நடத்தியுள்ளனர். இந்த விவகாரத்தை அரசமைப்பு ரீதியில் கையாள்வேன்' - என்றார். (அ-ஒ-5-22)

### 13ஐ...

அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். அதற்கு மகா சங்கத்தினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். கடந்த 8ஆம் திகதி கொழும்பில் பெரும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த அவர்கள், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்ட நகலைத் தீயிட்டு எரித்திருந்தனர்.

தற்போது அவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக இரண்டாம் கட்டப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இந்தப் போராட்டம் மிகிந்தலையில் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த உலப்பனே சுமங்கல தேரர், "கொழும்பில் முதல் வேட்டுத்தான் தீர்க்கப்பட்டது. அடுத்தக்கட்ட நகர்வுகள் அதிரடியாக அமையும்" என்று தெரிவித்துள்ளார்.

"தற்போதைய சூழ்நிலையில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுப்பதே எமது பிரதான நோக்கம். ஆனால், 13 முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்து. அது வரை போராட்டம் தொடரும்" என்று வேறு சில பௌத்த தேரர்கள் தெரிவித்துள்ளனர். (அ-எ-44)

### பிரபாகரன்...

பேரியக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் அண்மையில் தெரிவித்தமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

'பிரபாகரன் ஒரு இனத்தின் அதாவது தமிழினத்தின் உரிமைக்காக பயங்கரவாத வழியில் போராடியதால் அவருக்கு எதிராக இலங்கை அரசும் அதன் படைகளும் போரிட்டன. இதைவிட மேலதிக கருத்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை' - என்றார். (அ-ஒ-5-22)

### முன்னாள்...

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கிழக்கு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் கணிதத்துறை பேராசிரியராகப் பணியாற்றியவர். துணைவேந்தராகப் பதவி வகித்த காலப்பகுதியில் மட்டுமல்ல தனது பல்கலைக்கழக தொழில் வாழ்வு காலங்களிலும் தமிழ்த் தேசியத்துக்காக பல்வேறு பணிகளை ஆற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதியாகவும் பதவி வகித்தவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவராக இருந்து அதே பல்கலைக்கழகத்தின் துணேவேந்தர் ஆனார் எனும் வரலாற்றை முதலில் பதிவு செய்தவர் பேராசிரியர் விக்கினேஸ்வரனாவார். (அ-எ-66)

### உள்ளூராட்சித்...

குறிப்பிட்டுள்ளார்.

அரச செலவினங்களை மட்டுப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய, நாட்டின் அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

அவை தவிர, ஏனைய அத்தியாவசிய மற்ற செலவுகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு நிதி அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என மற்றுமொரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் தேர்தலுக்குத் தேவையான நிதியை பெற்றுக்கொடுப்பதில் சிக்கல் காணப்படுகின்றது என்று நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளார். (எ-இ)

### மதவாதம்...

தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீண்டெழுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ளவேண்டும். சர்வதேச உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கின்றன. இந்திய அரசாங்கமும் பெரியளவில் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருகின்றது.

கொழும்பில் ஒரு கலாசார மண்டபத்தை அமைத்தார்கள். அதன் நிர்வாகத்தை அவர்களே வைத்துள்ளனர். ஆனால், இந்திய அரசால் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் நிர்வாகமும் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதை யாழ்ப்பாணம் மாநகரசபையிடம் ஒப்படைத்திருக்கவேண்டும்.

இலங்கையில் மத அடிப்படைவாதம் வேகமாக வளர்ந்துவருகின்றது. இங்கு வசிக்கும் சிங்கள மக்களாக இருக்கலாம், தமிழ் மக்களாக இருக்கலாம் அவர்கள் அனைவரும் மண்ணின் மைந்தர்கள். ஆனால், வெளிநாடுகளில் இருந்து வந்து மதமாற்றும் செயற்பாடுகள் இங்கு இடம்பெறுகின்றன. இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் உலகையே உலுக்கியிருந்தது. மதவாதம், பயங்கரவாதம், ஆயுதக் கலாசாரம் என்பன முடிவுக்கு வரவேண்டும். அமைதியான - வளமான இலங்கை உருவாக வேண்டும் - என்றார். (அ-எ-110)

### தபால்...

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் வாக்குச் சீட்டு அச்சிடுவதற்கான நிதி விடுவிக்கப்படாமையால் அச்சிடும் பணிகள் தடைப்பட்டிருந்தன. அதையடுத்து, வாக்குச்சீட்டு விநியோகப் பணிகள் ஒத்திவைக்கப்படுகின்றன என்று கடந்தவாரம் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

தற்போது தபால் மூல வாக்களிப்பும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த அரசாங்க அச்சகம், அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை உரிய தினங்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்காமையால் 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுக்கள் அடையாளமிடப்படாது என்றும், மீண்டும் அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடப்படும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### சிவராத்திரி...

சிவத் தலங்களில் விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கேதீச்சரத்தில் இன்று சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் சிவராத்திரி உற்சவம் ஆரம்பமாகவுள்ளது.

முதலாம் சாமப் பூசை இரவு 8 மணிக்கும், இரண்டாம் சாமப் பூசை இரவு 10.30 மணிக்கும், மூன்றாம் சாம இலிங்கோற்பவ பூசை நள்ளிரவு 12.15 மணிக்கும், நான்காம் சாமப் பூசை அதிகாலை 3 மணிக்கும், தொடர்ந்து அதிகாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெறும். நாளை ஞாயிற்றுக் கிழமை அதிகாலை உற்சவ மூர்த்தி பாலாவி தீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவார்.

இதேவேளை- சிவராத்திரி தினத்தன்று ஆலய வெளிவீதியில் அமைக்கப்படும் பிரமாண்ட அலங்கார மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அதில் தமிழக மற்றும் இலங்கை கலைஞர்களின் ஆன்மீக உரைகள் மற்றும் பண்ணிசைக் கச்சேரி என்பன நிகழ்த்தப் படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய நிதியுதவியின் கீழ் திருக்கேதீச்சரம் ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப் பட்டது. அதன்பின்னர் இன்றே முதற்றடவையாக சிவராத்திரி உற்சவம் நடைபெறுகின்றது. சிவராத்திரி தினத்தன்று நாட்டில் பல்வேறு பாகங்களில் இருந்து ஆயிரக் கணக்கானவர்கள் திருக்கேதீச்சரத்துக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி!

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணத்தில் செவ்விளநீருக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் அவற்றின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.
தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி மற்றும் வெப்பம் காரணமாக அவற்றின் நுகர்வு அதிகரித்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.
ஒரு செவ்விளநீர் 150 ரூபா முதல் 200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.
அதேவேளை தெற்கேயிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு செவ்விளநீர் எடுத்து வரப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# ‘நிலாச்சோறு’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 18
கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் எழுதிய 'நிலாச்சோறு' நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு டேவிட் வீதியிலுள்ள கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
பேராதனைப் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதிப் பதிவாளர் ர.ரமேஸ் வாழ்த்துரையையும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் வெளியீட்டுரையையும் தாய்மொழிக் கலைமன்றச் செயலாளர் எழுத்தாளர் புயல்நேசன் மதிப்பீட்டு உரையையும் நிகழ்த்தவுள்ளனர்.
(ச-159)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 18
புன்னாலைக்கட்டுவன் வடக்கு அன்னை ஸ்ரீ கட்டுக்குள நாச்சிமார் கோயில் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில், எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 4 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 6 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என ஆலய ஆதீன குரு சிவஸ்ரீ.ந.சபாரத்தினக் குருக்கள் தெரிவித்துள்ளார்.
(ஒ-14-66)

# கீரிமலை நகுலேஸ்வரர் சிவராத்திரி உற்சவ ஏற்பாடுகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 18
ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் கீரிமலை சிறி நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள மஹா சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் ஆலய மண்டபத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது சிவராத்திரி உற்சவத்துக்கு ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய பொருத்தமான ஆலோசனைகளைத் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் முன்வைத்தார்.
பக்தர்களின் வசதி கருதி போக்குவரத்துப் பொலிஸார் பொருத்தமான 5 இடங்களில் வீதித் தடைகளை ஏற்படுத்தவுள்ளனர். வீதித் தடைகளைக் கடந்து செல்ல வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது போன்ற பல விடயங்கள் முன்வைக்கப்பட்டு சிவராத்திரி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
கூட்டத்தில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ.ந.குமாரசாமிக் குருக்கள், தொடர்புபட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகள், பொலிஸார், கடற்படையினர் உட்படத் துறைசார் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.
(ஒ-14-66)

## மரண அறிவித்தல்



**பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன்**
**(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன் அவர்கள் நேற்று (17.02.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பஞ்சவர்ணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் பத்மாதேவி தம்பதியரின் மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், விசாகன், வாசனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 3416**
**075 041 5497**
(CS 23526)1-6


**ENGLISH CLASS.FOR G.C.E O/L**
Personal & Group Classes
Gr. 6 - 11
Contact No. 076 426 0136

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் உள்ள கடைக்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு: 074 210 4820

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றுக்கு சமையல் வேலையாள் மற்றும் பரோட்டா மாஸ்டர் தேவை.
077 981 2191

**காணி விற்பனைக்கு**
**யாழ்ப்பாணம்**
யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் இருந்து சுமார் 350 மீற்றர் தூரத்தில் குமாரசாமி வீதியில் 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 247 8360 (CS/49101) 4,6

**வேலைவாய்ப்பு**
யாழ்நகரில் இயங்கும் பிரபல கட்டட பொருள்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு கீழ்வரும் வேலைகளிற்கு பணியாளர்கள் தேவை.
1. கணக்கு பதியுனர் (ஆண் / பெண்)
2. களஞ்சிய லிகிதர் (ஆண்)
**கல்வித்தகைமை** : க.பொ.த. உயர்தரம் / சாதாரண தரம் மேற்பதவிகளிற்கு முன் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். **சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.**
தொடர்புகளுக்கு: 021 222 2664, 021 222 8520
021 222 7184 , 077 731 1683

**தவறிவிட்டது**
பொன்னம்பலம் பாலசிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையுடன் (491593431V) சிறு தொகைப் பணமும் பர்சுடன் நேற்றுமுன்தினம் ஆரியகுளம் - நல்லூர் - செம்மணி வீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **நாகவிகாரை முன்பாக உள்ள "அக்ஷதை" ஹோட்டலில்** தயவுசெய்து ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.
**தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**
தொடர்புகளுக்கு : 077 340 3027 (CS 49196)4,6

**வீடு விற்பனைக்கு**
நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து 5 நிமிட நடைதூரத்தில் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
**பார்வையிடும் நேரம் :**
சனி, ஞாயிறு
முற்பகல் 10.00 - மாலை 6.00 மணிவரை
**தொடர்பு:**
071 416 3280
074 271 5339
WhatsApp
+1416 893 2377




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.